வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி

சுருக்கு **வழக்கு எண்.391/2016**

**வழக்கு சாட்சி.அ.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | ரவி | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | முத்தையா | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுக்கா:** | | **வயது :** | 52 /2023 |

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 31.03.2023**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**(சாட்சி Crmp.No.8159/2022,மனு மீதான உத்தரவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை**

1) நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் பிஸ்கட் வியாபாரம் செய்து வருகிறேன். நான் சமூகம் நீதிமன்றத்தில் எத்தனை காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 4, 5 வழக்குகள் உள்ளது. எண்ணிக்கை ஞாபகம் இல்லை. எனது சகோதரர் ராமமூர்த்தி சமூகம் நீதிமன்றத்தில் 4,5 வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என்றால் நீதிமன்றத்தில் பார்த்துள்ளேன். எத்தனை என்று தெரியாது. என்னுடைய மனுவில் எதிர்மனுதாரர் முன்னர் பெற்றதாக ரூபாய் ஐந்து இலட்சம் கூறியுள்ளதில் எந்த தேதி, எந்த ஆண்டு பெற்றார் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையிலும் தேதி, ஆண்டு கூறவில்லை என்றால் சரிதான். மனுவில் எதிரி லுனாடிக் (Punatic Control) என்ற நிறுவனத்தினை நடத்தி வருவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அது எந்த வகையான நிறுவனம் என்றால் சுவிட்ஸ் பாக்ஸ் தயாரிக்கும் நிறுவனம். நான் எதிரியின் நிறுவனத்திற்கு நேரடியாக சென்று பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அவர் எத்தனை கிளைகள் வைத்துள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வழக்கு காசோலையினை எந்த தேதியில் என்னிடம் எதிரி அளித்தார் என எனது மனுவிலும், முதல் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். வழக்கு காசோலையினை எந்த இடத்தில் என்னிடம் எதிரி அளித்தார் என எனது மனுவிலும், முதல் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். வங்கி நடைமுறைகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் ஓரளவிற்கு தெரியும். என்னுடைய மனுவில் வங்கியில் போதுமான பணம் இல்லாத காரணத்தினால்

திருப்பப்பட்டதாக கூறி பின்னர் Payment stopped by the Drawer என்று கூறியுள்ளோம் என்றால் சரிதான்.

2) காசோலை தொகையினை நிறுத்திவைக்க கோரி வாடிக்கையாளர் வங்கிக்கு கூறும் வழக்கம் உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனது அசல் மனுவில் காசோலையானது Payment Stopped by the Drawer என்ற காரணத்தினால் திருப்பப்பட்டதாக கூறியே return memo ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர் மனுதாரர் காசோலை தொகையினை நிறுத்திவைக்ககோரி வங்கிக்கு அறிவிப்பு கொடுத்ததனால்தான் எனது காசோலை நிறுத்தப்பட்டது என்றாலும் நான் மனுவில் கூறியுள்ளவாறு பணம் இல்லாத காரணத்தினால் நிறுத்தப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியவில்லை. அறிவிப்பிலும் போதுமான தொகை இல்லாத காரணத்தினால் திருப்பப்பட்டதாக கூறவில்லை என்றால் இல்லை. கூறியுள்ளோம். எதிரி எனக்கு எவ்வாறு அறிமுகம் என்றால் எனது நண்பர் மூலம் அறிமுகம். அவர் எந்த மாவட்டம் என்றால் கோயம்புத்தூர் மாவட்டம். அவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரணை செய்ய இருக்கிறோமா என்றால் இல்லை. எதிரியை நான் நீதிமன்றத்தில் ஆஜராகும்போதுதான் முதன்முதலில் பார்த்தேன் என்றால் இல்லை. எதிரி தன்னுடைய காசோலை புத்தகத்தில் என்னுடைய அண்ணன் ராமமூர்த்திக்கு இவ்வழக்கு காசோலையினை அளித்ததாக குறித்து வைத்துள்ளதனை தாக்கல் செய்வதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் உள்ளது. எதிரிக்கு என்னை தெரியாது என்றாலும், என்னிடம் தொகை ஏதும் பெற்று வழக்கு காசோலையினை எனக்கு வழங்கவில்லை என்றால் சரியல்ல. நான் காசோலை வழக்குகளில் கொடுத்துள்ள தொகைக்கு வருமான வரி கட்டியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய வியாபாரத்திற்கு நான் வருமான வரி கட்டவில்லை என்றால் சின்ன வியாபாரம் என்பதால் கட்டவில்லை. நான் எதிரிக்கு எந்த வங்கியிலிருந்து தொகை எடுத்து கொடுத்தேன் என்றால் கையிருப்பில் வைத்திருந்தது. எனக்கு ஆண்டு வருமானம் எவ்வளவு என்றால் 2 லிருந்து 3 இலட்சம். எதிரி என்னிடம் பணம் பெற்று காசோலை பெற்றிருந்தால் எந்த தேதி எந்த வருடம் என குறிப்பிட்டுருப்பேன் என்றாலும், அவ்வாறு வாங்கவில்லை என்பதால்தான் தேதி, வருடம் குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சியானது வேண்டுகோளிற்கிணங்க வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.